# திருக்கோணமலைத் திருவுருவங்கள்

15251



(1954)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலைத்

# திருவுருவங்கள்

குல. சபாநாதன்

1954

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

# முகவுரை

திருக்கோணமலை வெண்கலத் திருவுருவங்கள் (Trincomalie Bronzes) என்னும் பொருள் பற்றி டக்டர் டபிள்யூ. பாலேந்திரா அவர்கள் சேயல் ஆசியச் சங்கத்திலே ஆங்கில மொழியில் ஒரு கட்டுரை வாசித்தார். இது இப்பொழுது நூலாக வெளிவந்துள்ளது. கோணேசர் ஆலயத்தின் பூர்வீக வரலாற்றையும், திருக்கோணமலையிற் கண்டெடுக்கப்பட்ட விக்கிரகங்களின் சிறப்பையும் பற்றி டக்டர் அவர்கள் சிறந்த ஆராய்ச்சிகளைக் கூறியுள்ளார்கள். இந்நூலேயும் யான் சேகரித்த குறிப்புகளையும் ஆதாரமாகக்கொண்டே இச்சிறு நூல் தமிழில் அமைக்கப்பட்டது. டக்டர். டபிள்யூ. பாலேந்திரா அவர்களே இதனை வெளியிடுவதற்குரிய செலவைத் தந்துதவினார்கள். இதற்காக அவர்களுக்கு எனது நன்றி உரியதாகுக. இந்நூலைக் கலை உலகம் ஏற்று ஆதரிக்குமென நம்புகிறேன்.

இங்ஙனம்
குல. சபாநாதன்

வெள்ளவத்தை,
கொழும்பு.
1954-ஆம் ஆண்டு மாசி 20 உ
மகா சிவராத்திரி தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலைத் திருவுருவங்கள்

## தோற்றுவாய்

இலங்கையின் சிறந்த அரணாக விளங்குவது திருக்கோணமலை. இலங்கையைப் பிடிக்கும் நோக்கமாக வந்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் முதன் முதற் கால் வைத்த இடமும் திருக்கோணமலையேதான். கடந்த மகா யுத்தத்திலும் திருக்கோணமலை, கடற்படை காவல் புரிந்த பேர் பெற்ற துறையாக விளங்கி வந்தமை உலகம் அறிந்த விஷயம். இலங்கையிலே தமிழர்கள் முதன் முதலாகக் குடியேறிய பிரதேசம் திருக்கோணமலைப் பகுதியாக இருந்ததாகச் சரித்திராசிரியர் ஒருவர் கருதுகின்றார். கிழக்கு மாகாணத்திலுள்ள இடப்பெயர்கள் தமிழ்ப் பெயர்களாக இருத்தலும் இக்கொள்கையினை வலியுறுத்தும்.

இங்ஙனம் தமிழர் நாகரிகம் பரவியிருந்த பிரதேசத்தில் அருள் நிறைந்ததாக ஒரு ஆலய நகரம் (கோயில்) இருந்திருத்தல் இயல்புதான். புராதனப் பெருமை வாய்ந்த இப்புனித ஸ்தலத்தின் வரலாறு முழுவதும் கிடைக்காமை பெருமை தமிழர் தம் தவக் குறைவென்றே சொல்லலாம். இதன் பண்டை வரலாறு காலத்திரையினுள் புதையுண்டு கிடக்கின்றது. தக்ஷிண கைலாய புராணம், திரிகோணாசல புராணம், கோணேசர் கல்வெட்டு, திருக்கோணாசல வைபவம் முதலிய நூல்களிற் சிற்சில சம்பவங்கள் மட்டுமே ஆங்காங்கு மிளிர்கின்றன.

## பெயர்க் காரணம்:

திருக்கோணமலையென்னும் பெயர் மும்மலைகள் கூடி முக்கோண வடிவினதாயிருந்ததால் ஏற்பட்ட பெயர் என்பர் ஒரு சாரார். கோணேசுவரர் எழுந்தருளப்பெற்ற மலையாதலின், இத்தலம் திருக்கோணேஸ்வரம், திருக்கோணமலை, திருக்கோணமாமலை, திருக்கோணாசலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பெயர் வழங்கப்படலாயிற்று. சம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனார் இருவரும் 'கோணமாமலை' என்று பாடிப் பரவியுள்ளனர். அருணகிரிநாதர் இத்தலத்தைத் திருக்கோணமலையென அழைத்துப் பாடியுள்ளார். இத்தலம் பூர்வீக நகரான திருக்கோணமாமலையிலுள்ள கடலோரமான ஒரு குன்றின் உச்சியில் அமைந்திருந்தது. ஆனால் இது தக்க சான்றுகளுடன் நிரூபிக்கப்படவில்லை.

__சரித்திரச் சுருக்கம்:__

இராவணன் இத்தலத்தில் வழிபட்டான் எனப் புராணங்கள் கூறுகின்றன. சோழ நாட்டரசனாகிய மநு ராம தேவன் திருக்கோணமலைச் சிகரத்தில் கோணேசருக்குக் கோயில் எடுத்தான் எனவும், இவனுடைய மகன் குளக்கோட்டன், இத்திருப்பணியை நிறைவேற்றி இலங்கை இராச குமாரியாகிய ஆடக சவுந்தரியை மணம் முடித்து வாழ்ந்து, சுற்றிக் கோபுரம் எடுத்தான் எனவும் தக்ஷிண கைலாச புராணம் கூறுகின்றது. கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன் இக்கோயிலிற் பூசைச் சிறப்புகளை நடைபெறுவதற்கு வேண்டிய பூசகர்களை அமைத்துக் கோயிலையும் திருத்தியமைத்தான் எனக் கோணேசர் கல்வெட்டு கூறுகின்றது. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் சம்பந்த சுவாமிகள் காலத்தில் இவ்வாலயம் சிறந்த நிலையில் இருந்தமையால் "கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலையமர்ந்தாரே" எனப் பாடியுள்ளார். பதின் மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்தவராகிய புலவர் சிரம்பாஸ்???? கோணமலையின் நல் இருப்பி??? லெழுதி கோயிற் சுற்றிய நிலங்களை இறையிலி நிலமாக்கினான் என்று வரலாறு குறிப்பையும் சாசனத்திற் கூறப்பட்டுள்ளது. பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் அருணகிரி நாதரும் கோணேசரைக் குறித்து திருப்புகழ் பாமாலை சூட்டியுள்ளார். யாழ்ப்பாணத்திலிருந்து அரச புரிந்த ஆரியச் சக்கரவர்த்திகளும் இக்கோயிலை ஆதரித்து வந்தனர்.

கி. பி. 1627 வரை இலங்கையிற் போர்த்துக்கேசத் தேசாதிபதியாகவிருந்த "கொன்ஸ்தாந்தினு டீசா" என்பவனே இக்கோயிலை இடித்து அதன் கற்களைக் கொண்டு கோட்டையைக் கட்டுவித்தான். கோயிலின் சித்திரம் அமைந்த சாசனங்கள் பலவற்றை அழித்தபோதும் இலவே. இவ்வழைப்பின் விளைவாயிருந்தா நாம் பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்திலிருந்து பிரதி செய்து விரிவாக எழுதியிருக்கிறார் லெப்டினன்ற் கேணல் ஸ்ரீ. பி. தோமஸ் அவர்கள் "திருக்கோணமலைச் சரித்திரம்" என்ற நூலில். இக் கோயில் அழிக்கப்பட்ட சம்பவம் ஏற்கெனவே ஒரு வெண் பாவிற் கூறப்பட்டிருந்ததை முதலியார் செ. இராசநா யகம் அவர்கள் தாம் எழுதிய "புராதன யாழ்ப்பாணம்" என்னும் நூலில் எடுத்துக் காட்டியுள்ளார். போர்த்துக் கேசர் இக்கோயிலையிடிப்பதற்கு முன்னர் ஆயிரக்கால மண்டபமும் அழகிய வீதியும் அமையப்பெற்ற மலை ஒன்றை சுமந்து எடுத்துச் சென்றனர். இது கோணே சுவரர் திருவருட் செயலென்றே நம்பவேண்டும்.

பறங்கிக்காரர் திருக்கோணேசுவரத்திற்கு வந்து குளக்கோட்டு மகாராசனாற் கட்டப்பட்ட கோயிலையும் ஆயி ரக்கால் மண்டபம் முதலியவைகளையும் இடித்துப் பாவ நாச சுனைத்தையும் மூடுவித்தனர். கோயிலின் முதலியவற் றிலிருந்து கருங்கற்களை எடுத்துத் தற்பொழுதிருக்கும் கோட்டையைக் கட்டுவித்துத் திருக்கோணேசுவரத்தையும் அரண் செய்தார்கள். அக்காலத்தில் திருக்கோணேசுவரத் துக்குப் போய் பூசை செய்யப்படாதென்று திடமான கட்டளை செய்தார்கள். தற்பொழுதிருக்கும் கோட்டையிற் கதவு நிலையில் வைக்கப்பட்டிருக்கும் கல்லில் "முன்னே குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப் பின்னே பறங்கி பிரிக்கவே" எனத் தொடங்கும் பாட்டு வெட்டப்பட்டிருக் கின்றது. மற்ற இரண்டு வரிகளும் அதிகம் விளக்கமில் லாமல் அழிந்திருக்கின்றன.

கோயில் இடிக்கப்பட்டதும் அங்கிருந்த விக்கிரகங் களைப் பூசகர்கள் எடுத்துச் சென்று ஒளித்து வைத்தனர். பின்னர் சில காலம் தம்பலகாமத்தில் வைத்து வழி பட்டு வந்தனர். கோயில் இடிக்கப் பெற்ற போதிலும் சைவ நன்மக்கள் திருக்கோணமலைக் கோட்டைக்குள் கோயில் இருந்ததாகக் கருதப்பட்ட இடத்திற்குப் பூசை செய்து வரும் வழக்கத்தைக் கைவிடவில்லை. அநேக இடையூறுகள் நேர்ந்தும் இவ்வழிபாடு தொடர்ந்து நடை பெற்று வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய இடத்தில் மீண்டும் ஒரு ஆலயம் அமைக்க வேண்டுமென்ற ஆர்வம் சைவ மக்களிடையே எழுந்தது. இதற்காகப் பல முயற்சிகள் தோன்றி மறைந்தன. 1939-ஆம் ஆண்டில் டாக்டர் டபிள்யூ. பாலேந்திரா அவர்கள் இக்கோயில் மீண்டும் கட்டவேண்டும் என்ற ஆர்வத்துடன் புதைபொருள் ஆராய்ச்சிப் பகுதித் தலைவ ராகிய லொங்கேகரா மூலம் கட்டடப் படம் ஒன்று தயா ரித்து ஆவன செய்து வந்தார். ஆனால் அம்முயற்சியும் நிறைவேறவில்லை.

## திருக்கோணமலை வெண்கலத் திருவுருவங்கள்

1950-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 3-ஆம் திகதி நிலத் திலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ள கலைமிக்க படிமங்களில், தனிப்பு கழ்பெற்றிருந்த தங்க நகைகள் நீட்டி அலங்கரிப்பது போல இளவனவாம் பிரகாசிக்கும் வேளையில் காலை 10 மணி யளவில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. திருக் கோணமலை உதவி அரசாங்க அதிபர் காரியாலய உத்தியோகத்தர், திருக்கோணமலைத் தொகுதிப் பாராளுமன்ற அங் கத்தவர், நகர சபைத் தலைவர், உபதலைவர், பொது வேலைப் பகுதி எக்சிகியூட்டிவ் இஞ்சினியர், ஜஸ்டிஸ்மார், பாட சாலை ஆசிரியர்கள், கோயிற் பூசகர்கள் முதலியோர் சமுகமளித்தனர்.

1624-ஆம் ஆண்டு இந்து புது வருடப் பிறப்புத் தினத்தன்று போர்த்துக்கீசத் தளபதி கொன்ஸ்தாந்தினு டி சா என்பவரால் தரைமட்டமாக்கப்பட்ட கோணேசர் கோயிலை மீண்டும் கட்டியெழுப்புதல் பற்றி ஆலோசிப் பதற்காகவே இத்திருக்கூட்டம் கூடியது. கோயி லைக் கட்டி நிறைவேற்றிய பின்னர், அதன்கண் எந்த தெய்வத் திருவுருவத்தைப் பிரதிட்டை செய்வது என்ற கேள்வி அப்போது எழுந்தது. இக்கேள்விக்கு உடனடி யாக விடைகிடைப்பது சாத்தியமன்றாதலின் அதனை நன் காலோசித்துத் தீர்மானிக்குமாறு ஒரு குழுவினர் நிய மிக்கப்பட்டது. கோணேசர் ஆலயத்தை மீட்டும் கட்டுதல் பற்றியும் சுவாமியினுடைய சிலைகளைத் திருவுருவம் ஒன்று கூற வரலாறமைத்தல் பற்றியும் ஆலோசிக்க இந்துக் சங் கச் சபையின் அங்கத்தவர்கள் 1950-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6-ஆம் திகதி மீண்டும் கூடித் தீர்மானித்த னர். இந்நிலையில் பட்டின சபைத்திருவால் வேண்டுகோ ளிறுத்தப்பட்ட தொழிலாளர் சிலர் வடகடற்கரைத் தெரு வீதி யிலுள்ள கிறு கூடைகளில் வாரிப்பலகைகளின் உப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகத்திலிருக்கும் ஒரு கனவு கண்டு கொண்டிருந்த னர். இத்தொழிலாளர்களுள் ஒருவர் 1950-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27-ஆம் திகதி நீர்த்திலிருந்து மூன்று அடி ஆழத்தில் வெட்டிய பொழுது அவர் தமது மண் வெட்டி ஏதோ ஒரு கடினமான பொருள் மீது பட்ட தாக உணர்ந்தார். உடனே, சகல தொழிலாளரும் ஒருங்கு சேர்ந்து தோண்டினர். என்ன அதிசயம்! மூன்று அழகிய திருவுருவங்கள் வெளிக்கிளம்பின. சிவன் (சோமாஸ்கந்த மூர்த்தம்), சோமாஸ்கந்த மூர்த்தத்தின் ஓர் அங்கமான பார்வதி, சந்திரசேகரர் ஆகிய இம் மூன்று திருவுருவங்களும் பட்டினசபைத் தலைவர் வசம் ஒப்படைக்கப்பட்டன. அவர் இவ்விஷயத்தைத் தொல் பொருட் பகுதி அதிபருக்கு அறிவித்தார். மேற் கூறிய மூன்று திருவுருவங்கள் வெளிக்கிளம்புவதற்கு முன் னரே வேறு இரு வெண்கலத் திருவுருவங்கள் கண் டெடுக்கப்பட்டன. ஆனால் இவை பட்டினசபைத் தலைவர் வசமாவது தொல் பொருட் பகுதித் தலைவர் வசமாவது ஒப்படைக்கப்படவில்லை. இவை எங்கே இருக்கின்றன என்பதையறிந்து கொள்ளப் பிரயத்தனம் செய்யப்பட் டது. இதன் பயனாக வெண்கலத்தாற் செய்யப்பட்ட கணேசர் விக்கிரகம், பார்வதி விக்கிரகம், திரிசூலம், அன்னப்பறவை வடிவமைந்த விளக்கொன்றே கண்டெடுக்கப் பட்டவை தெரிய வந்தது. இந்த வெண்கலப் பொருட் களும் ஒரு கடற்கரைத் தொடர்ப்பிறிதில் ஒரு தென்னை மரத்து அடி வேரினுள் மறைந்து இருந்து கண்டெடுக் கப்பட்டன. இவையும் கடைசியாகத் திருக்கோணேஸ்வரத் திருப்பணிச் சபைத் தலைவர் வசம் ஒப்படைக்கப்பட்டன. இந்த வழிபாட்டுப் பொருட்களும் எப்போது செய்யப்பட்டன? அவை எவ்வாறு உபயோகிக்கப்பட்டன? அவை செய்யப்பட்ட காலம் யாது? அவை எந்த நாட்டில் செய்யப்பட்டன? அவை ஆதியில் எந்தக் கோயில் அல்லது கோயில்களில் இருந்தன? என்பனவற்றை நிச்சயமாக ஆராய்வ தில் கரிசனை கொண்டவர் டொக்டர் பாலேந்திரா அவர் கள். இவ்விஷயத்தில் நிபுணத்துவம் வாய்ந்த ஆராய்ச்சி அறிஞர்களின் அபிப்பிராயங்களை அவர் கோரினார். திருக்கோணமலையின் சரித்திரத்தைப் பல நூல்களின் உதவி கொண்டு பரிசீலனை செய்த...

கண்டெடுக்கப்பட்ட பொருட்களின் விபரம் பின்வருமாறு:

| | அளவு | நிறை |
|---|---|---|
| சிவன் (சோமாஸ்கந்த மூர்த்தம்) | 1' 4½" × 10" | — 70 இறா. |
| பார்வதி (சோமாஸ்கந்த மூர்த்தம்) | 1' 4" × 6" | — 30 ,, |
| சிவன் (சந்திரசேகர மூர்த்தம்) | 1' 8" × 7" | — 25 ,, |
| பார்வதி (திரிபங்க வடிவம்) | 1' 3" × 5" | — 30 ,, |
| கணேசர் | 1' 8" × 10½" | 65 ,, |
| திரிசூலம் | 1' 7" × 1' | — 8 ,, |
| விளக்கு மூடி (அன்னப்பட்சி) | 1' 5" × 1'2" | - 7 ,, |
| | | 235 இறா. |

திருக்கோணமலையிற் கண்டெடுக்கப்பட்ட சிவ விக்கிரகம் உலகத்திலே காணப்படும் விக்கிரகங்களுள் ஒப்புயர்வற்றது. இதனை அமைத்த சிற்பி சிற்பக் கலையிற் கைதேர்ந்தவன் என்பதற்கையமில்லை. ஆசனத்தில் வீற்றிருக்கும் பாவனையில் அமைந்த சிவ விக்கிரகம் இலங்கையிலே வாழ்ந்த சிற்பிகளால் அமைக்கப்பட்டிருத்தல் கூடும். சந்திரசேகர மூர்த்தமாய் அமைந்த சிவ விக்கிரகம் மேற்கூறிய சிவ விக்கிரகம் அமைக்கப்பெற்ற காலத்திற்கு எவ்வளவோ முற்பட்டதென்பதற்கையமில்லை. முற்கூறிய விக்கிரகத்தைப் போல இஃது அவ்வளவு அழகாகச் செதுக்கமாக அமையவில்லை. எனினும் இதுகாறும் காணப்படும் விக்கிரகங்களுள் இதுவே மிகப் பழையது என்பது தெற்றெனப் புலப்படும். சோமாஸ்கந்த சுகாசன மூர்த்தத்தின் ஓர் அங்கமாயமைந்துள்ள பார்வதி விக்கிரகத்திலும் சிறந்த அமைப்பும் அழகும் காணப்படுகின்றன. எனினும் திரிபங்க தோற்றத்தில் அமைந்த பார்வதி விக்கிரகம் வெண்கலத்தில் அமைக்கப் பெற்ற சக்தி விக்கிரகங்களுள் தலைசிறந்ததொன்றாக விளங்குகின்றது. இது திரிபங்க வடிவத்தில் அமைந்துள்ளது. வலது கரம் கடகமுத்திரையுடன் காணப்படுகின்றது. வலக்கை விரல்களைச் சிறுக மடித்தும் விரித்தும் பெருவிரலுடன் பொருந்த வைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கை அபிநயம் காட்டுகின்றதும் காணப்படும், பாசுபதி விக்கிரகத்தின் இடது கரம் கீழே தொங்கிக்கொண்டிருக்கும் கைவிரல்கள் உள்ள தன்மையில் மேலால் நீண்டு முத்திரைபோல அமைந்துள்ளது. இனி திருக்கோணமலையில் கண்டெடுக்கப்பட்ட சுவாமி விக்கிரகமும் சுடு இணையற்றதாகவே விளங்குகின்றதென்பது டக்டர் பாலேந்திரா அவர்களின் கருத்து. இலங்கையிலும் இந்தியாவிலும் காணப்படும் இந்நாயகர் அல்லது கணேச விக்கிரகங்களுள் இதுவும் ஒன்று சிறப்பு அமைதி வாய்ந்த அழகிய விக்கிரகம் இதுவேயென்றே டக்டர் அவர்கள் கருதுகின்றார்கள். சந்திரசேகரருக்கும் பொதுவாக திரிசூலமும் அல்லாவிடில் மழுவும் உள்ளனவாகும். சிவனுடைய ஆயுதமாகிய திரிசூலம் ஒரு அடி 7 அங்குல உயரமும் ஒரு அடி அகலமுமுள்ளது. அன்னப்பறவை உருவம் ஒரு முத்தி வேலைகளின் அழகிய மைந்து புள்ளிகளால் நிறைந்து பூட்டப்பட்டு இருந்திருத்தல் வேண்டும்.

இனி, தமிழ் நூல்களிலும் அந்நிய மூலங்களிலும் உள்ளவற்றை ஆராயுமிடத்து, திருக்கோணமலையில் கோணேசர் ஆலயத்தில் ஆயிரக்கால் மண்டபமும் இத்தகைய பொருட்களும் இருந்தனவென்பதற்கு இடமுண்டு.

1624-ஆம் ஆண்டு புது வருடப் பிறப்பு விழா திருக்கோணமலைக் கோயிலில் நடைபெறுவதும் கொண்டிருக்கும் பொழுது, போர்த்துக்கேயர் பிராமணர் போல வேடம் பூண்டு வந்து கோவிலைத் தாக்கினார். அத்தருணத்தில் மேலே குறிப்பிடப்பட்ட சுவாமி பொருட்களையும் சிவனடியார்கள் கடலினுள் எறிந்திருத்தல் கூடும். அன்றேல் மலையிலிருந்து 500 அடி வரை தூக்கிச் சென்று பாதுகாப்பான இடத்தில் புதைத்து வைத்திருத்தல் கூடும். தம் உயிருக்கே ஆபத்து நேர்ந்த போதிலும், சிவனடியார்கள் அந்த விக்கிரகங்களையும் ஏனைய பொருட்களையும் புதைத்து வைத்தார்கள் என்று கூறுவது பொருத்தமானதாகக் காணப்படுகிறது. ஏனெனில் முன்னர்க் குறிப்பிட்ட தொழிலாளர் விக்கிரகங்களைக் கிண்டியெடுத்தபொழுது, அவை புதையுண்டு வைக்கப்பட்டிருந்ததெனத் தெரிய வந்தது. பிற்காலத்தில் இந்த விக்கிரகங்களை எவராவது கண்டு பிடிக்க நேரிடின், இத்திருவுருவங்களுக்கு எவ்வித தீங்கும் ஏற்படாதிருக்க வேண்டுமென்று ஆராய்ந்தே பூசகர் அவ்வாறு புதைத்து வைத்திருக்கலாம். அத்திருவுருவங்களைப் புதைத்து வைத்த சிவனடியார்களின் தொலைநோக்குத் தொண்டின் பெருமையை எவ்வாறு அளவிட முடியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் ஆற்றிய அருந்தொண்டின் பயனாகவன்றோ இவ்வழகிய விக்கிரகங்களை மீண்டும் பெறும் பாக்கியம் பெற்றோம். தொண்டர் தம் பெருமை சொல்லவும் படுமோ! இவையாவும் கோணேசப் பெருமானின் திருவிளையாடல் என்றே கூறலாம்.

கோணேசர் ஆலயம் கட்டப்பட்டிருந்த இடத்தைத் திட்டமாக அறிந்து கொள்வதற்குரிய படங்களைத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டுமென்று டாக்டர், டபிள்யூ. பாலேந்திரா அவர்கள் கண்ணுங் கருத்துமாக உழைத்து வந்தார்கள். லிஸ்பனிலுள்ள தேசிய ஞான நிலையத்தில் இலங்கை சம்பந்தமான படங்கள் இருப்பதாய் அறிந்து டாக்டர் அவர்கள் அங்கே சென்று தேடிப் பார்த்தார்கள். அத்தகைய படமொன்று அந்நூல் நிலயத்தில் இருப்பதை 1952-ஆம் ஆண்டு ஜூலை மாதம் கண்டு பேரானந்தம் கொண்டார்கள். அப்படத்தின் பிரகாரம் மலையில் மூன்று கோயில்கள் இருந்ததமை புலப்பட்டது. ஒன்று மலையடிவாரத்திலும், மற்றது மத்தியிலும், மூன்றாவது கோயில் மலையுச்சியிலும் அமைக்கப்பெற்றிருந்தன. மலையுச்சியிலே தான் சிறந்த சிற்ப வேலைப்பாடமைந்த ஆலயம் இருந்தது.

1950-ல் கண்டெடுக்கப்பட்ட திருவுருவங்கள் இலங்கையிலுள்ள தம்பொற்றுப் பட்டணத்துக்கும் கிராமத்துக்கும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன. பக்த கோடிகள் இவற்றைக் கண்ணாரக் கண்டு தொழுதனர். 325 வருடங்களாக மறைந்து கிடந்த கோணேசர் மறுபடியும் தரிசனம் தருவதைக் கேள்விப்பட்ட ஜனங்கள் திரள் திரளாகக் கூடித் தம் பக்திப்பரவசத்தைக் காட்டினர். 3500 ஆண்டுகட்கு முன்னாற் கட்டப்பெற்ற கோயிலுக்கு ரூ. 35,000 சேர்ந்தது. இந்தப் பணத்தினை ஏழை எளியவர்கள் அன்புடன் அளித்த செம்பேற்றுக் காசுகளும், ஐந்து சதக்குற்றிகளும் அடங்கியவையாம்.

கோணேசப் பெருமான் இலங்கையிலுள்ள பக்த கோடிகளுக்குக் காட்சி கொடுத்தத் திருவிழாக்களில், அவர் முன்னர் எழுந்தருளியிருந்த இடத்தில் மீண்டும் கோயில் கொண்டருளுவதற்கு ஒரு சிறு ஆலயம் சுவாமி மலையில் விரைவாக உருவாகியது. இந்த விக்கிரகங்கள் 1952-ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 23-ம் திகதி பிரதிஷ்டை செய்யப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டக்டர் பாலேந்திரா அவர்கள் செய்த ஆராய்ச்சியின் பயனாகக் கண்ட முடிவுகள் பின்வருமாறு:

(1) கண்டெடுக்கப்பட்ட விக்கிரகத் திருவுருவங்கள் சுவாமி மலையில் இருந்த கோயிலுக்குரியன.

(2) 1621-ஆம் ஆண்டில் வருடப் பிறப்பு விழாவன்று போர்த்துக்கீசர் கோயிலைத் தாக்கிய போது இத்திருவுருவங்களை எடுத்துச் சென்று கோயிற் பூசகர்கள் இவற்றைப் புதைத்து வைத்தனர் போலும்.

(3) கோயில் கட்டப்பெற்ற காலம் 3541 ஆண்டுகட்கு முன்னர் ஆகலாம்.

(4) புத்தர் பெருமான் இலங்கையில் அவதரிப்பதற்கு முன்னர் இப்பகுதியில் நாகரிகம் வாய்ந்த சமயம் ஒன்றிருந்ததென்பதை ஊகிக்க இடமுண்டு.

(5) சில விக்கிரகங்கள் (சந்திர சேகர மூர்த்தம்) சோழர் காலத்தின் ஆரம்பத்தில் அதாவது பத்தாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அமைக்கப் பெற்றனவாகலாம். கைலாசனத்தில் வீற்றிருக்கும் சிவ விக்கிரகமும் பார்வதி விக்கிரகமும், திரிபங்க நிலையில் அமைந்த பார்வதி விக்கிரகமும், கணேச விக்கிரகமும் பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழ, விஜய நகரச் சிற்ப முறையின் அமைந்துள்ளன. திரிசூலம் பல்லவச் சிற்ப முறையைப் பின் பற்றியமைந்துள்ளது. இது பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகலாம். இந்த விக்கிரகங்களுட் சில இலங்கையிலுள்ள சிற்பிகளால் அமைக்கப் பெற்றிருத்தல் கூடும் என்பதை முற்றாக மறுக்க முடியாது.

(6) பதினோராம் நூற்றாண்டு விக்கிரகங்களிலுள்ள ஆபரணங்களைப் பின்பற்றியே இலங்கையிலுள்ள மக்கள் இக்காலத்தில் அணியும் ஆபரணங்கள் அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(7) கோவிலைச் சூழவுள்ள உள்வீதிப்புறமாக வழிபாட் டுக் காவலர்கள் சிலைகளும் பழமையான தொன்று ஆகும். நிக்கோலாயனிக் நாகரி கமும் மொகஞ்சதரோ நாகரிகமும் ஆகக் குறையத் தனி காலத்தன என்றும் கொள் ளலாம்.

டொக்டர் பரமேஸ்திரா அவர்கள் தாம் அறிஞர் முயற்சியா ல் சேகரித்த குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டு தமது கண்டு பிடிப்புகளை ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையாக எழுதி 1953 ஆந் மாதத்தில் நடைபெற்ற இலங்கை ஆசியச் சங்கக் கூட்டத்தில் பலர் முன்னிலையில் வாசித்தார். இந்தக் கூட்டத்துக்கு த் தலைமை வகித்த பேராசிரியர் பிரபு தம்மை மறந்து தாம் கூட்டத்துக்கு தலைமை வகித்த அறிஞர் சிலர் டொக் டர் பரமேஸ்திரா அவர்களின் அரிய முயற்சியைப் பாராட் டி நிறைவுடன் பாராட்டிப் பேசினார்கள்.

கண்டுபிடிக்கப்பட்ட சிற்பங்களைக் கொண்டும் கிடைத்த கோவிலைச் சூழவுள்ள புதையுண்ட இடங்களிலும் ப லக் கல்லைக் கொண்டும் விட்டன. இப்போது ஒரு சிறிய ஆலயம் அமைக்கப் பெற்றுள்ளது. எனினும் பொதுத் தலைவர் தலைமையிலும் கோவில் மேன்மை சிறப்பு ஆலயத்தை அமைப்பித்த பலர்களின் சேவை இத் தலைவர்கள் ஆலயத்தை அமைப்பதற்குத் தங்களால் பண்ம் செலவழித்துப் புரிந்த சேவைகள் நம் கடமையா கும். மேற்கே திருக்கேதீச்சரம் கிழக்கே திருக்கோ ணேச்சரமும் போலப் கோபுரங்களுடன் திகழும் நல் லதோர் கலைக்கூடம் தோன்றும் காலம் எதிர் பார்த்துக்கொண்டிருக்கின்றது.

---



[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

திருவாய்மலர்ந்தருளிய

## திருக்கோணமலைத் தேவாரப் பதிகம்.

பண் - புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

நிரைகழல் அரவஞ் சிலம்பொலி அலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே. 1

கடிதென வந்த கரிதனை யுரித்து
அவருரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுதல் அவளொடும் உடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமுன் நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலையமர்ந் தாரே. 2

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாகம்
ஆகமுன் கலந்தவர் மதின்மேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்துமோர் சருகை விழித்தழல் நாகந்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்

குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே. 3

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா

விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்

தெழித்துமுன் அரற்றுஞ் செழுங்கடல் தரளஞ்
செம்பொனும் இப்பியுஞ் சுமந்து

கொழித்துவன் திரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே. 4

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்

வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்

நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்

கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே 5

பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்

திரிந்திடா வண்ணம் உதைத்தவற் கருளுஞ்
செம்மையார் நம்மையா ளுடையார்

விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே. 6

எடுத்தவன் தருக்கை யிழித்தவர் விரலால்
ஏத்திட ஆத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோணமா மலையமர்ந் தாரே. 7

அருவரா தொருகை வெண்டலை யேந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையும் நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரும் அறியா வண்ணமொள் ளெரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்
குருவரா யநின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே. 8

நின்றுணுஞ் சமணும் இருந்துணுந் தேரும்
நெறியலா தனபுறங் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசினா ரொருபால்
மெல்லிய லொடுமுட னாகித்
துன்றுமொண் பௌவம் மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம்வந் துலவுங்
கோணமா மலையமர்ந் தாரே. 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றமி லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரைக்

கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்

உற்றசெந் தமிழார் மாலையீ ரைந்தும்
உரைப்பவர் கேட்பவ ருயர்ந்தோர்

சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே. 10

திருச்சிற்றம்பலம்.

இறைவன் - கோணேசுவரர்; இறைவி - மாதுமையாள்.

---

உ

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

திருப்புகழ்—திருக்கோணமலை

விலைக்கு மேனியி லணிக்கோவை மேகலை
தரித்த வாடையு மணிப்பூணு மாகவெ
விளக்கு மாதர்க ளிடக்காய மூழ்கியெ
மெய்ஞரி

விதத்த காமிய மெனப்பாரு மேபெறிர்
தனைக்க லேபட வெடுத்தேனை பாருமே
வெறுப்ப தாகியெ யுழைத்தேனை யாம்பரு
கொடியேனைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலக்க மாகிய மலக்கடி லேமிரு
பிணிக்கு மாயிரீ துணிக்காய மெய்யுமே
கனிக்கு மாமொளி யொத்தநிற மேனியு
பொருவையுமே

கதிக்கு நாயக யுகத்தேறு மேயுக
வுரைக்கு நாயகா பருகாசைக யாகிய
கழுத்து மாகிய சிறப்பான நாயகன்
தானேயும்

பயக்கு நாயக வெக்கையி மயக்
இருக்கு மாரேனை முகத்தாறு தேவிக
வடிபட மொருவாரு குறும்பாலை யாள்ளசிறு
தருவேனோ

வசிட்டம் கயேமர் குலத்தான வேசியை
அகத்திய மாமுநி யிராசக்காமர் கிரணும்
மருத்த மாமுநி பொருட்கோல மாமவரு
புருகோனோ

நீலக்கு நான்மறை மகத்தான பூசர்
இருக்கோ ஆதிமல் நலத்தரு கோபுர
நீலக்கும் மணியிஸ் இன்பமாகு புதியல்
வருவோனோ

செழுந்து மொழிபவ கற்றுநூறு யாகியே
வெழுந்து மேலகோதி மொடித்தன நானறி
நினைத்த கனிப யழுக்கால் மேயூர்
பெருமானோ.

The Nadaraja Press, Colombo.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்குமிடம்:—

சரஸ்வதி புத்தகசாலை

175, செட்டியார் தெரு,

கொழும்பு.

---

ஸ்ரீலங்கா புத்தகசாலை

221, காங்கேசன்துறை ரோட்டு,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org